தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1975 ஏப்ரல் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

New courses in Engineering

*506 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether it is a fact that training in Electro Chemical Engineering is being imparted in the Government Engineering colleges in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) மின் வேதியியலில், பட்டப்படிப்பிற்கு மேற்பட்ட பட்டய பயிற்சி வகுப்பு ஒன்று ஐந்து பகுதி நேர மாணவர்களுக்கும், ஐந்து முழு நேர மாணவர்களுக்கும் நடத்த 1973-74-லிருந்து, காரைக்குடி அழகப்பா பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் வசதி உள்ளது.

*507 **வினா**—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்திலுள்ள என்ஜினியரிங் கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பற்றிய பட்டமேற்படிப்பு துவங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த கல்லூரிகளில் தொடங்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்னை கிண்டி அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் மட்டும் கம்யூட்டர் பற்றிய பட்ட மேல்படிப்பு துவங்க அனுமதி யளிக்கப்பட்டுள்ளது. படிப்பு அடுத்த ஆண்டு துவக்கப்படலாம்.